## திராவிட இயக்க இதழ்கள் - ‘நவரச அண்ணா’




1971-ஆம் ஆண்டு, செப்டம்பர் 15 முதல் வெளியான இதழ், ‘நவரச அண்ணா’. மாதமிருமுறை இதழாக இது வெளிவந்துள்ளது.

‘கிந்தனார்’ என்பவர் ஆசிரியராகவும், ஏ.வி.நாராயணன் என்பவர் வெளியீட்டாளராகவும் கொண்டு வெளிவந்துள்ளது. அக்டோபர் 15 முதல் மாதமிருமுறை இதழாகவும் வந்த பத்திரிகை, டிசம்பர் முதல் பெரிய அளவில் தினசரியாகவும் வெளிவர உள்ள அறிவிப்பினை முதல் இதழிலேயே வெளியிட்டுள்ளனர்.

“நல்ல வேளையாக தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தோன்றினார்கள்! நமது நாகரிகமும், மொழியும் புத்துயிர் பெற்றன.

பெரியார் அவர்கள் தளர்ந்துவிட்டார்கள். அண்ணா அவர்கள் மறைந்துவிட்டார்கள். ஆனால், அவர்களுடைய பணி முடியவில்லை. அது தொடர வேண்டும்.

நமது சீர்திருத்தத் தலைவர்கள், நமக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டார்கள். அதை நாம் மறக்காமல் சிந்தித்துப் பார்த்தால்போதும்; நாம் உயர்ந்து விடுவோம். மக்களுக்கு மறுமலர்ச்சியைப் பற்றி, அடிக்கடி நினைவுறுத்துவதற்காக ‘நவரச அண்ணா’வைத் தொடங்கியுள்ளோம்” என முதல் இதழில் குறிப்பிட்டுள்ளனர்.

அண்ணாவின் 63-வது பிறந்தநாளில் தொடங்கப்பட்டதால், முதல் இதழ் முழுவதும் அண்ணா குறித்த செய்திகளே அதிகம் இடம்பெற்றுள்ளன. அது தவிர, அரசியல் துணுக்கு, கட்டுரைகள், மேடை நாடக விமர்சனம், சினிமா செய்திகள் ஆகியவையும் இடம்பிடித்துள்ளன. பெரியார் பதிப்பகம், சென்னை-15 என்கிற முகவரியில் இருந்து வெளியாகியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### ‘நிலா’, வானம் கருப்பா, நீலமா?



பி.லெ.தமிழ்நிலா

என் தந்தை கோவி.லெனின் அவர்கள் எழுதிய ‘திராவிட (ர்) இயக்கம் நோக்கம் தாக்கம் தேக்கம்’ என்கிற நூலை, அச்சில் இருந்து வந்த உடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் வழங்குவதற்காக கோபாலபுரம் புறப்பட்டார். அப்போது ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நான், “கலைஞர் தாத்தாவைப் பார்க்க நானும் வருகிறேன்” என அவருடன் சென்றேன். கலைஞர் தாத்தா என் பெயரை கேட்டார். நான், “தமிழ் நிலா” என்றேன். உடனே அவர், “நிலா கருப்பாக இருக்குமா?” எனக் கேட்டார். “நிலா வெள்ளையாக இருக்கும். வானம்தான் கருப்பாக இருக்கும்” என்றேன். அவர் மீண்டும் வானம் கருப்பா? நீலமா? என்றார். அதற்கு நான், நிலா இருக்கும் வானம் கருப்பாக இருக்கும் என்றேன். அந்தப் பதிலைக் கேட்டு அவர், ரசித்துச் சிரித்தது என்னால் மறக்க முடியாத ஒன்று. அப்போது சமச்சீர்க் கல்வி கொண்டு வந்ததற்காக அவருக்கு நன்றி தெரிவித்தேன்.

**– பி.லெ.தமிழ்நிலா, சென்னை பல்கலைக்கழக மாணவி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இடைத்தேர்தல் படிப்பினை!

1958-ஆம் ஆண்டு திருவாடானை இடைத்தேர்தலில் கழகம் தோல்வியைக் கண்டிருந்தது. ‘ஜனநாயகப் பணி’ என்ற ஒரே அடிப்படையில் மட்டுமே இடைத்தேர்தலில் கலந்து கொள்கிறோம், ஆனாலும், பொதுத் தேர்தலில் கழகம் பெற்ற வாக்குகளுக்கும், இடைத்தேர்தலில் பெற்ற வாக்குகளுக்கும் எண்ணிக்கை மாற்றம் அதிகமில்லை. ‘கழகத்தின் எதிர்கால ஆக்கத்துக்கான வழி வகைகளைத் தீவிரமாக்குவதற்குரிய படிப்பினையாக இடைத்தேர்தல் முடிவை மதிப்பிட்டுக் கொள்கிறோம்’ என ‘நம்நாடு’ இதழில் எழுதினார், பேரறிஞர் அண்ணா.

## முதன் முதலில் 22

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**



# கைத்தறி வரவேற்பு!

ஒடுக்கப்பட்டவர்கள் தங்கள் தோளில் துண்டு போட்டால், அதிகார வர்க்கம் அவர்களைத் தாக்கிய காலம் ஒன்றிருந்தது தமிழ்நாட்டில்! அதனை உடைக்கும் முயற்சியாகவே பேரறிஞர் அண்ணா அவர்களால், கட்சி மேடைகளில் அமர்ந்திருக்கும் சிறப்பு விருந்தினர்களைப் பொன்னாடை போர்த்தி வரவேற்கும் வழக்கம் வந்தது.

‘பொன்னாடை’ என்பது பேச்சு வழக்குதான். உண்மையில், அவை பொன்னாடைகள் அல்ல, கைத்தறித் துண்டுகள்...! அரசியல் பொதுக்கூட்டங்களுக்கு வரும் சிறப்பு விருந்தினர்களுக்கு, கைத்தறித் துண்டு போட்டு மரியாதை செய்யும் மரபை திராவிட இயக்கமும், திராவிட முன்னேற்றக் கழகமும்தான் முதன்முதலில் தொடங்கின.

சரி, ஏன் கைத்தறி? அதற்கு ஒரு பின் கதை உண்டு. அது வெற்றிவீரன் என்பவர் தொகுத்த ‘அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்’ என்ற நூலில் காணக் கிடைக்கிறது. அந்தக் கதை இதுதான்:

“1953-ஆம் ஆண்டில் கைத்தறிக்கு மிகவும் வீழ்ச்சியான நிலை ஏற்பட்டிருந்தபோது, கழகத்தின் முடிவின்படி, திருச்சியில் அறிஞர் அண்ணாவும், கழகத் தோழர்களும் துணி விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது, நண்பர் உடுமலை நாராயணக்கவி அவர்கள் கைத்தறித் துணி விற்பனைக்காக இயற்றியிருந்த பாடல் ஒன்றை ஒரு தோழர் பாடிக் கொண்டு இருந்தார்.

அப்போது அந்தப் பாடலில் சின்னாளப்பட்டி என்ற ஊரில் நெய்யப்படும் துணி பற்றியும் ஒருவரி பாடப்பட்டது. அதைக் கேட்ட ஒருவர் கூட்டத்தில் இருந்து ஓடி வந்து, கீழே விழுந்து கும்பிட்டு, ‘நீங்கள் பாடி இருக்கிறீர்களே, சின்னாளப்பட்டி நெசவு பற்றி... அந்த சின்னாளப்பட்டியைச் சேர்ந்த நெசவாளன் தானய்யா நான்; தலையில் இருப்பது 15 சேலைகள். நான் நெய்தவை. கடந்த 4 தினங்களாக திருச்சியில் அலையாத தெருவில்லை, கூவாத குரலில்லை. ஒரு சேலையும் விற்கவில்லை. குடும்பமே பட்டினி’ என்று அழுதார். அந்தக் காட்சியைக் கண்ட அனைவரும் கண்ணீர் வடித்தனர். அண்ணாவும் கண் கலங்கினார்”.

உடுமலை நாராயணக் கவியின் அந்தப் பாடல், “செந்தமிழ் நாட்டுக் கைத்தறி நெசவுச் சேலைகள், வேட்டிகள் வாங்குவீர்; நம் திராவிட நாட்டினர் சேமம் வேண்டி, சிங்கார ஆடைகள் வாங்குவீர்!” என்பது. இந்த வரிகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ‘நெஞ்சுக்கு நீதி’ முதல் பாகத்தில் குறித்திருக்கிறார்.

கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க, அண்ணா தலைமையில், அண்ணா, கலைஞர் உட்பட கழகத்தினரே தமிழ்நாடு முழுவதும் மூட்டைகளைத் தலையிலும் தோளிலும் முதுகிலும் சுமந்து விற்றனர். அந்த நிகழ்வுக்காக 1953-ஆம் ஆண்டு ஜனவரி 4-ஆம் தேதியை, ‘கைத்தறி நாள்’ என்று அறிவித்து, திருச்சியில் அண்ணாவும், சென்னையில் கலைஞரும் கைத்தறித் துணிகளை விற்றனர். அதுகுறித்து, கலைஞர் இவ்வாறு எழுதுகிறார்:

“அப்படி விற்ற மொத்தத் தொகை ஒரே நாளில் ஒரு லட்சம் ரூபாய்! சென்னையில் நான் விற்பனையை மேற்கொண்டேன். இருபதாயிரம் ரூபாய்க்கு விற்பனையாயிற்று. சந்தை இல்லாமல் தேங்கிக் கிடந்த கைத்தறி ஆடைகள், அந்த ஒரு நாள், கழகத்தினர் செய்த பிரச்சார முயற்சியின் காரணமாக சுறுசுறுப்புடன் சந்தையைப் பிடித்துக்கொண்டன. நெசவாளர்களின் கண்ணீர் துடைக்கப்பட்டது.

கழகத்தினர் அனைவரும் கைத்தறித் துணிகள்தான் அணிய வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவுக்குப் பிறகு கைத்தறிக்குப் புதிய செல்வாக்கே உதயமாயிற்று. கழகத்தின் இரு வண்ணக் கொடி போட்ட வேட்டிகளும் சேலைகளும் இன்று ஆயிரக்கணக்கில் விற்பனையாவதற்கும், நாடெங்கும் கைத்தறியின்மீது புது மோகம் ஏற்படுவதற்கும் கழகத்தினரின் செயல்தான் காரணம் என்பதை நெசவாளர்கள் மறக்கவே மாட்டார்கள்”.

**சந்தை இல்லாமல் தேங்கிக் கிடந்த கைத்தறி ஆடைகள், அந்த ஒரு நாள், கழகத்தினர் செய்த பிரச்சார முயற்சியின் காரணமாக சுறுசுறுப்புடன் சந்தையைப் பிடித்துக்கொண்டன.**

நாமும் மறந்துவிடக் கூடாது..!

...அடையாளம் அறிவோம்.


## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ் 22**

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# ‘காரோட்டி’ கண்ணப்பன்!

திராவிட இயக்க வரலாற்றில் சில பெயர்களைச் சொன்னதுமே பெயரைக் காட்டிலும் முன்னொட்டு சட்டென நினைவுக்கு வரும். அண்ணாவுக்கு ‘பேரறிஞர்’, மாறனுக்கு ‘முரசொலி’, நெடுஞ்செழியனுக்கு ‘நாவலர்’, கி.வீரமணிக்கு ‘ஆசிரியர்’, சத்தியவாணி முத்துவுக்கு ‘அன்னை’. சிலருக்கு முன்னொட்டுகள் பெயராகவே மாறிப்போயும் இருக்கின்றன. பெரியார், கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் பெயர்கள் அப்படியானவை. இந்த வரிசையில் கண்ணப்பன் என்றதும், ‘காரோட்டி கண்ணப்பனா...’ என்று விளிக்கும் அளவுக்குச் சிறப்புவாய்ந்த வரலாற்றைக் கொண்டவர் முன்னாள் அமைச்சர் கோவை மு.கண்ணப்பன்.




இன்றைய கழகத் தலைவர், பேராசிரியர், ஆசிரியர் கி.வீரமணி ஆகியோரது வாழ்த்துரையுடன், திராவிட இயக்க வரலாற்றாய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்களின் அணிந்துரையுடன் 2019-ஆம் ஆண்டு வெளியான புத்தகம்தான் ஓ.சுந்தரம் அவர்கள் எழுதிய ‘கோவை மு.கண்ணப்பன்: வாழ்வும் பணியும்’ நூல்.

வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் என்றாலும், திராவிட இயக்க வரலாற்றை விவரிக்கும் அரசியல் வரலாற்று நூலாகவே இருக்கிறது இது. 328 பக்கங்களில் 50 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இந்த நூலில் இயக்க வரலாறு-பங்கேற்றக் கொள்கைப் போராட்டங்கள் -கழகத்தவருடனான தோழமை -மிசா காலக் கொடுமைகள்-மாவட்டச் செயலாளராக, அமைச்சராக, நாடாளுமன்ற உறுப்பினராக, ஒன்றிய அமைச்சராக மு.கண்ணப்பன் ஆற்றிய பணிகள் என பலவற்றை நூல் பட்டியலிட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில், கழகம் வளர்ந்த வரலாற்றை சுவாரசியம் குன்றாமல் படிப்போருக்குக் கடத்துகிறது இந்த நூல். விலைவாசி உயர்வு, இந்தித் திணிப்பு எதிர்ப்பு, கருப்புக் கொடி காட்டும் போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம் என மு.கண்ணப்பன் அவர்கள் பங்கேற்ற போராட்டங்கள் நூலில், வரிசையாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

கலைஞர் தலைமையிலான அரசில் அவர் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த காலத்தில்தான் அன்னைத் தமிழில் அர்ச்சனை, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் போன்ற புரட்சிகரச் சட்டங்கள் இயற்றப்பட்டன. வர்கீஸ் குரியன் முன்னெடுப்பில், நடைபெற்ற ‘வெண்மைப் புரட்சியும்’, தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட ‘ஆவின்’ நிறுவனமும் பால் வளத்துறை அமைச்சராக கண்ணப்பன் அவர்களின் சாதனை என்றே சொல்லலாம்.

மிசா காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு காரோட்டியாகச் செயல்பட்ட நிகழ்ச்சிகள் 3 அத்தியாயங்களுக்கு நீள்கிறது. மு.கண்ணப்பன் ‘காரோட்டி கண்ணப்பன்’ ஆனது அப்படியான தருணத்தில் தான்.

மிசா காலம் முழுக்க கலைஞர் அவர்களுடன் இருந்தவர், ம.தி.மு.க உருவான சமயத்தில், அதன் பொருளாளராகப் பொறுப்பேற்று கழகத்தை விட்டு விலகிச் சென்றார். அதன் பிறகு, 15 ஆண்டுகள் கழித்து ‘வாரி அணைத்துக் கொள்கிறேன் வருக!’ என்று அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் தலைமையில், மீண்டும் கழகத்தில் இணைந்துள்ளார். இந்த வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் பல அரசியல் நிகழ்வுகளைத் தொகுப்பாக நமக்கு வழங்குகிறது.


திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அனைவருக்கும் தனி வரலாறு என்ற ஒன்றே கிடையாது. இந்த இயக்கத்தின் போக்கில் அவர்கள் வழித் துணையாய் வந்து, தங்களது சுவட்டை ஆ ழமாகப் பதித்துச் செல்கிறார்கள் என்பதையே ‘காரோட்டி கண்ணப்பன்’ அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் நமக்குத் தெரிவிக்கிறது.

**“இயக்கத்தின் போக்கில் அவர்கள் வழித் துணையாய் வந்து, தங்களது சுவட்டை ஆழமாகப் பதித்துச் செல்கிறார்கள் என்பதையே ‘காரோட்டி கண்ணப்பன்’ அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் நமக்குத் தெரிவிக்கிறது.”**

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 554

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131